**பொல்கஹவெல பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 மே 31 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொல்கஹவெல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டணங்கள் வருமானம் ரூபா 2,688,371 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற தவறொன்றாக ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 431,666 தொகையான 06 வாரச்சந்தை கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்படவில்லை. | கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும் | கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற தவறொன்றாக ஏற்றுக் கொள்கின்றேன். 2019 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் 04 கணக்கு விடயங்களில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் உரிய | குறித்த சீராக்கம் செய்யப்பட வேண்டும் | கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற தவறொன்றாக ஏற்றுக் கொள்கின்றேன். 2019 ஆம் ஆண்டின் |

| | | | |
|---|---|---|---|
| | அட்டவணைக்கிடையே ரூபா 2,110,701 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | | போது கணக்கீடு செய்யும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 41,291,064 ஆன 02 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன. | கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,467,415 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 220,059 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 11,021 | 11,021 | 5,795 | 9,695 | 11,096 | 11,096 | 11,265 | 7,437 |
| வாடகை | 8,819 | 8,819 | 9,907 | 4,201 | 9,090 | 9,090 | 8,875 | 3,512 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 651 | 396 | 867 | - | 2,626 | 375 | 481 | - |
| ஏனைய வருமானம் | 18,630 | 18,630 | 45,487 | 41,261 | 18,482 | 18,482 | 6,147 | 3,208 |
| மொத்தம் | **39,121** | **38,866** | **62,056** | **55,157** | **41,294** | **39,043** | **26,768** | **14,157** |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் ரூபா 7,436,958 தொகையான அறவிடப்பட வேண்டிய நிலுவையில் ரூபா 1,749,780 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இவ்வாறு அறவிடப்பட்ட தொகையில் ஆதனங்களை தடைகள் கட்டளை மூலம் அறவீடுகள் ரூபா 617,665 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுகளுக்குரிய மொத்த நிலுவையில் 8 சதவீதமாகும். | நிலுவை வரி துரிதமாக அறவிடப்பட வேண்டும். | 2013 ஆம் ஆண்டில் வழங்கிய வழக்கு தீர்ப்பின் காரணமாக பீ.ச.விதி பிரகாரம் துறையில் சென்று வீதவரி சேகரிக்காதிருந்ததுடன் அதனால் வீதவரி சேகரிப்பு பின்னடைவ இடம்பெற்றிருந்தது. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 837,993 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 40,453,071 ஆக இருந்தது. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப்பணம் முத்திரை கட்டண பதிவேடுகள் முஜறயாக பேணிச்செல்லப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவி யணியினரில் மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்களும், இரண்டாம் தர நிலையில் 12 வெற்றிடங்களும் ஆரம்ப நிலை தரத்தில் 13 வெற்றிடங்களும் காணப்பட்டன. | உரிய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அங்கீகரிப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் தலைமை செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.2.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் உடமை கொண்டுள்ள 09 காணிகளின் உரித்து கைடீயேற்க்கபட்டிருக்கவில்லை. | காணியை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இக்காணியை எதிர்காலத்தில் கையேற்க நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 3.2.2 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொல்கஹவெல கொழும்பு வீதியின் முன்பக்கமாக சபைக்கு சொந்தமாக காணப்படும் உத்தியோகபூர்வ விடுதி மற்றும் கராஜ் என்பன 11 ஆண்டுகாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன | பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வகையில் தயார் செய்யப்பட வேண்டும். | இது பயன்படுத்த மடியாத நிலைமையில் உள்ளதால் எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |